1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய நாடு முழுவதும், தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியத் திருநாடு முழுவதும் வன விலங்குகளை பாதுகாக்க வேண்டும் என்று ஒரு கொள்கையோடு விதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் யானை மிதித்து மரணம் ஏற்படுகிறது. நஷ்டஈடு தருகிறோம். அதேபோல யானை பயிர்களை நாசம் செய்கின்றது. இதற்கு இங்கே தமிழ்நாட்டில் நஷ்டஈடு தர வேண்டுமா வேண்டாமா என்று ஒரு பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ஒருசேர பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உத்தமபாளையம், தேனி, சின்னமனூர் ஒன்றியங்கள் நிதிப்பற்றாக் குறையால் குடிநீர்க் கிணறுகளிலுள்ள பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணம் செலுத்தாமலுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் நா. இராமகிருஷ்ணன், ஜி. பொன்னுபிள்ளை, எல். மூக்கையா ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, 'உத்தமபாளையம், தேனி மற்றும் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் குடிநீர்க் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் கட்டணம் செலுத்தாமல் உள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

5–3–1990 ஆம் நாளிட்டு பொதுப்பணித்துறை அரசு செயலாளர் அவர்கள் அனுப்பிய நே.மு. கடிதத்தில் மின்வாரியத்திற்கு அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், நகராட்சிகள் ஆகியவை செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகை நிலுவையில் உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியம் மிகுந்த நிதி நெருக்கடியில் இருப்பதால் மின் கட்டண பாக்கித் தொகையை உடனடியாக கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார். ஆனால் அம்மக்களின்அன்றாடத் தேவையை மனதில் கொண்டு 30–6–1990-க்குள் மின் கட்டணத் தொகை கட்ட காலக் கெடுவும் அளித்துள்ளார். இது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு 30–6–1990-க்குள் மின் கட்டண பாக்கித் தொகையை கட்ட துரித நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[திரு. கோ. சி. மணி] [1990 ஏப்ரல் 16

2. இந்நிலையில் மின் கட்டணம் செலுத்தாத மதுரை, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் நிதி வசதி இல்லாததால் குடிதண்ணீர் மேல் நிலை தொட்டிகளுக்கு மின் கட்டணம் செலுத்தாததற்காக 7–4–1990 அன்று மின் துண்டிப்பு செய்ய எவ்வித அடிப்படைக் காரணமும் இல்லை.

3. இதே போல் மதுரை மாவட்டத்தில் தேனி, சின்னமனூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் கட்டணம் செலுத்தாததற்காக மின் இணைப்பு துண்டிக்கப்பட எவ்வித அடிப்படைக் காரணமும் இல்லை.

11–20 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 13 ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மின் இணைப்பிற்கு மின் கட்டணம் முழுவதுமாக செலுத்தத் தவறினால், முன் அறிவிப்பு எதுவுமின்றி மின் துண்டிப்பு செய்யப்படும் என்று மின்வாரியம் அறிவித்துள்ளது. உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி மன்றங்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாக, ஊராட்சி மன்றங்களுக்கு மின் கட்டணமாக ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 250 ரூபாய் இதுவரை செலுத்தியுள்ளது. மேலும் தற்சமயம் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை செலுத்த உத்தமபாளையம் பொதுநிதியிலும், ஊராட்சிகளின் நிதியிலும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், ஊராட்சிகளில் பணி புரிகிற சுகாதார சிப்பந்திகள், எழுத்தர்களுக்குக் கூட கடந்த ஆறு மாத காலமாக சம்பளம், பொங்கல் கருணைத் தொகை ஆகியவை வழங்கப்படவில்லை. எனவே, உத்தமபாளையம், ஊராட்சி ஒன்றியத்திலும், அனைத்து ஊராட்சிகளிலும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பிற்குரிய மின் கட்டணம், நிதி வரும் தேதி வரையில் தவணை நீடித்து தரவேண்டும். மின் துண்டிப்பு செய்வதைத் தவிர்க்க வேண்டும். மின் துண்டிப்புச் செய்வதைத் தவிர்க்கும்படியும், இலவசமாக விவசாயிகளுக்கு 10 குதிரைத் திறன் வரையிலுள்ள அந்த பம்பு செட்டுகளுக்கு சலுகை அளித்துள்ளதைப் போல, குடிநீர்ப் பிரச்சினை என்ற காரணத்தால், இதற்கும் சலுகை தரவேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எல்லைகளில் 1988 முதல் மார்ச் 1990 வரை மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 98,788 ரூபாய். அதேபோல் சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்டவகைகளில் செலுத்த வேண்டிய தொகை 51,778 ரூபாய். சின்னமனூர் ஊராட்சி, உத்தமபாளையம் ஊராட்சி இவைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்

1990 ஏப்ரல் 16] [திரு. கோ. சி. மணி]

வேண்டிய நிலை இருப்பதாக மின் வாரியத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது உண்மை. ஆனால் துண்டிக்கப்படவில்லை. 3-6-1990 வரை கால நீட்டிப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதற்கிடையில் இந்த நிதியை செலுத்திவிட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியினருக்கு, வேறு ஒன்றியங்களில் நிதி இருக்கக்கூடிய ஒன்றியங்களில் தவணை முறையில் பெற்று, அந்த நிதியைச் செலுத்தி, இந்தக் கடனை அடைப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, சின்னமனூர், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிநீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. அதைப்போல தமிழகத்தில் ஏராளமான ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளில் நிதிநிலை இல்லாத காரணத்தால், மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. மின் கட்டணம் விவசாயிகளுக்கு ஒரு குதிரை வேகத்திற்கு 75 ரூபாய் என்று இருந்ததை இந்த அரசு 50 ஆக குறைத்திருக்கிறது. ஆனால், கிராமக் குடிதண்ணீர்க் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களுக்கு ஏராளமாக மின் கட்டணம் வருகிறது. அதிலும் கிராமக் குடிநீர்க்கிணறுகளில் ஆழ்க் குழாய்க் கிணறுகளில் இப்போது எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால், இரவு பகல் முழுவதும் மோட்டார் ஓட வேண்டிய காரணத்தால், ஒவ்வொரு மோட்டாருக்கும் மாதம் 600 ரூபாய் 700 ரூபாய் வரை மின் கட்டணம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையில், ஊராட்சிகளில் பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுக்குக்கூட 5 மாதம், 6 மாதமாக அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத ஊராட்சிகள் ஏராளமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில், எத்தனை தவணை கொடுத்தாலும் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலைதான் ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கிற காரணத்தால் இந்த அரசு கிராம மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குகின்றவைகளுக்காக மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள மோட்டார்களுக்கு இங்கே விவசாயிகளுக்குக் கொடுத்திருப்பதைப் போல, ஒரு குதிரை வேகத்திற்கு 50 ரூபாய் மின் கட்டணம் செலுத்துகின்ற அந்த வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, தேனி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், பாக்கி அனைத்தும் செலுத்தப்பட்டு விட்டது. இப்படி ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நெருக்கடி நிலை இருப்பதையொட்டி, அவற்றைப் பரிசீலித்து ஆய்வு செய்து, அரசாங்கத்திற்கு ஒரு தாக்கீது அனுப்பியதற்குப் பிறகு, அதைப்

பற்றி புனராலோசனை செய்யலாம் என்று அரசு கருதுகிறது. அதற்காக இந்த கமிட்டி விரைவில் அமைக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 31,88,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்களை முறையாக நடத்துவதை உத்தரவாதம் செய்ய கூட்டுறவு தேர்தல் கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு குறைந்த பட்சம் ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் துவக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."